தினமலர்

**November 27, 2014**

2 | தினமலர்
வியாழன் 27-11-2014

சென்னை

# பாரம்பரிய சின்னங்கள் மதிப்பை பாதுகாக்க வரலாற்று துறை மாணவர்களுக்கு அழைப்பு



■ உலக பாரம்பரிய வாரத்தை முன்னிட்டு, ஸ்டெல்லா மேரீஸ் மகளிர் கல்லூரியில் நடந்து வரும் உலக பாரம்பரிய சின்னங்களின் புகைப்பட கண்காட்சியை, ஆர்வத்துடன் குறிப்பெடுக்கும் மாணவியர்.

**சென்னை, நவ. 27–**

''பாரம்பரிய சின்னங்களின் மதிப்பை பாதுகாக்க, வரலாற்று துறை மாணவர்கள், தொல்பொருள் காட்சியகத்தில் சேர்ந்து காப்பாளர் போன்ற படிப்புகளை படிக்கலாம்'' என, தொல்பொருள் ஆராய்ச்சி துறை, துணை கண்காணிப்பாளர் மூர்த்தீஸ்வரி பேசினார்.

சென்னை, ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரியில் உலக பாரம்பரிய வார விழாவின் புகைப்பட கண்காட்சி நடந்து வருகிறது. நேற்று முன்தினம் நடந்த துவக்க விழாவில், தொல்பொருள் ஆராய்ச்சி துறை, துணை கண்காணிப்பாளர் மூர்த்தீஸ்வரி பேசியதாவது:

உலகில், யுனெஸ்கோவால் அங்கீகரிக்கப்பட்ட 1,047 பாரம்பரிய சின்னங்கள் உள்ளன. இந்த பகுதிகளில், போர் காலங்களில் கூட, குண்டு வீசக்கூடாது என, வரைமுறை உள்ளது.

அந்த பட்டியலில் உள்ள வெளிநாட்டு சின்னங்களை போன்ற பல்லாண்டு பழமையான, நேர்த்தியான கட்டடங்கள் நம் நாட்டில் நிறைய உள்ளன. ஆனால், அவற்றின் பாரம்பரியம் தெரியாமல், அவற்றை அழிப்பதிலும், அதில் பெயரை கிறுக்குவதிலும்தான், நாம் ஈடுபட்டு வருகிறோம்.

அதனால், நம் பாரம்பரிய சின்னங்களில் பல, உலக பாரம்பரிய சின்னங்களின் பட்டியலில் இடம் பெற முடியாத நிலையில் உள்ளன.

வெளிநாடுகளில், நம் நாட்டின் மதிப்பு உயர, நம் பாரம்பரியத்தையும், கலா சாரத்தையும் காப்பாற்ற வேண்டும். அதற்கு, இது போன்ற கண்காட்சிகள் உதவும்.

வரலாற்று துறை மாணவர்கள், தொல்பொருள் காட்சியகத்தில் சேர்ந்து, காப்பாளர் போன்ற படிப்புகளை படிக்கலாம்; அதன் மூலம், மக்களுக்கு, பாரம்பரிய சின்னங்களின் மதிப்பு, அவற்றை காக்க வேண்டியதன் அவசியம் ஆகியவற்றை எடுத்து கூறலாம்.

இவ்வாறு, அவர் பேசினார்.

புகைப்பட கண்காட்சி, இந்த வாரம் முழுக்க நடைபெறும். கண்காட்சியை காண, மாணவர்களுக்கு அனுமதி உண்டு.